திரு. வே. இரா. ஜெயராமன்: தலைவரவர்களே, நிலத்தடி நீர் உள்ள பகுதிகளில் புதிதாகக் கடன் வழங்க 'ஸ்பேசிங் கிரைட்டீரியா'-வை அவர்கள் கட்டாயப்படுத்துகிறார்கள். அவர்களுக்கு 'ஸ்பேசிங் கிரைட்டீரியா'வை ரிலாக்ஸ் செய்ய உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, அது நிலநீர் துறையின் சிபாரிசுளைப் பொறுத்தது.

வேதாரண்யம் காட்டில் மான் வேட்டை.

*510 வினா—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வேதாரண்யம் காட்டுப்பகுதியில் மான் வேட்டையை கட்டுப்படுத்த அரசு கடுமையான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதா?

(ஆ) கடந்த ஆண்டுகளில் இது சம்பந்தமான வழக்குகள் எவையேனும் பதிவு ஆகியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: (அ) வேதாரண்யம் காட்டுப் பகுதிகளில் மான்களை வேட்டையாடுவதிலிருந்து காக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வனச் சரகரைத் தவிர, இரண்டு வனப் பணியாளர்களும், இரண்டு வனப் பாதுகாவலர்களும் பாதுகாப்புப் பணியை மேற்கொண்டுள்ளனர்.

(ஆ) கடந்த ஆண்டுகளில் இரண்டு திருட்டு வேட்டை வழக்குகள் பதிவாகியுள்ளன.

(இ) 1974-75-ல் ஒரு வழக்கில் ஒரு மானை சுட்டதாக கண்டு பிடிக்கப்பட்டது. அந்த வழக்கில் ரூபாய் 1,200 அபராதத் தொகை வசூலிக்கப்பட்டது. 1975-76-ல் கண்டுபிடிக்கப்பட்ட மற்றொரு வழக்கில் குற்றவாளியை நீதிமன்றம் விடுவித்தது.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற காடுகளில் வேதாரண்யம் காடு மிகவும் சிறப்பு வாய்ந்தது. இராவணனை வீழ்த்தச் சென்ற

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1978 மார்ச் 11]

இராமன் அந்தக் காட்டு வழியாகச் சென்றதாக அங்கு பாதம் உள்ளது. இவ்வளவு சிறப்புமிக்க, பொன்மானைத் தேடிச் சென்ற இராமன் அந்த வழியாகப் போனதாக கூறப்படும் வரலாறு நிறைந்த அந்தக் காட்டை மேம்படுத்தவும், அதைப் பாதுகாக்கவும், அங்குள்ள மான்களை மேலும் வளர்க்கவும் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரவர்கள் வரலாறு என்று சொன்னார்கள். அது வரலாறு என்று எனக்குத் தெரியாது, அது புராணக் கதை என்று எல்லோரும் தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஆகவே, இராமனுடைய பாதம் இருக்கிறதோ இல்லையோ அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

(முற்பகல் 9-10)

இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல், கோடிக் கரை காட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அதை மாற்றுவதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு பல்வேறு அறிக்கைகளிலே எடுத்துச் சொல்லி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1977-78, 1978-79 ஆம் ஆண்டுகளில் ரூ. 3.5 இலட்சம் செலவில் சில மேம்பாட்டு வேலைகள் மேற்கொள்ள கருதப் பட்டுள்ளது. அதிலே, ஒன்று ரூ. 10,000-க்கு படகு ஒன்று வாங்குவதற்கு ஏற்பாடாகி இருக்கிறது. அதைப் போல் ஆராய்ச்சியாளர்கள், மற்றும் ஆராய்ச்சிக் கூடத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்காக ரூ. 1,80,000 ஒதுக்குவதற்கான ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அதே போல், கோயிலுக்குச் சொந்தமான தனியார் நிலங்களைக் கையகப்படுத்த ஏறத்தாழ ரூ. 1.67 இலட்சம் ஒதுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆக, மொத்தம், ரூ. 3.57 இலட்சம் ஒதுக்கி, அதை மேலும் மேம்படுத்துவதற்கான திட்டம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அம்பிகாபதி அவர்கள் வரலாறு தெரிந்தவர், புத்தகமே எழுதியவர். ஏன், இங்கே அதைக் கேட்டார் என்று தெரியவில்லை.

[1978 மார்ச் 11

திரு. செ. வீ. சவுந்திரராஜன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த வேதாரண்யம் காட்டுப்பகுதியில் என்னென்ன வகையான மான்கள் இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: தலைவரவர்களே, புள்ளி மான்கள் இருக்கின்றன, நீர் மான்கள் இருக்கின்றன. அதோடு, நீர்ப் பறவைகளும் ஏராளமாக இருக்கின்றன.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, மான்களை வேட்டையாடுவதைத் தடுக்கின்ற சட்டம் எந்த ஆண்டு முதல் அமுல்படுத்தப்படுகிறது. இது எந்த எந்த மான்களுக்குப் பொருந்தும் ? இப்பொழுது நிறைய மான் தோல்களை வெளியே விற்கிறார்களே, அதன்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: மான்களை மாத்திர மல்ல, வன விலங்குகளைச் சுடக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டம் எந்த ஆண்டு முதல் அமுலாக்கப் படுகின்றது என்று எனக்கு நினைவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அந்த ஆண்டைக் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்பினால், தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரத் தயாராக இருக்கிறேன். எந்த வன விலங்குகளைச் சுட்டாலும் அது சட்டப்படி குற்றமாகும்.

திரு. ஓ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, வேதாரண்யம் மார்சாங்ச்சுவரி ப்ரொட்டிக்டட் ஏரியா என்று பிரகடனப்படுத்தப் பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: அதுபற்றிய குறிப்பு என்னிடம் இப்பொழுது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன். இது பாதுகாக்கப்பட்ட ப்ரொட்டக்டட் ஏரியாவிலே வருகிற— காடாகத்தானிருக்க வேண்டும்.

திரு. பொ. உத்திராபதி: தலைவரவர்களே, கோடிக் கரைக் காட்டில் உள்ள மான்களைப் பற்றிப் பேசுகிறோம். மான்கள் அவசியம்தான். அதே நேரத்தில், கோடிக் கரை காட்டில், ஏழை விவசாயிகள் மாடுகளை விடுகிறார்கள். இந்தக் காட்டை

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU TRUTH ALONE TRIUMPHS

1978 மார்ச் 11]

மாடுகள் வளர்க்க விவசாயிகள் பயன்படுத்துகிறார்கள். அந்த மாடுகள் புயலால் அதிகமாகச் செத்திருப்பதாகவும் கேள்விப் படுகிறோம். அப்படிச் செய்திருந்தால் உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படுமா? அப்படி விடக்கூடிய மாடுகளைப் பாதுகாப்பாக வளர்க்க அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, மான்கள் தாராளமாக வாழ்கின்ற காடுகளில் மாடுகள் இறப்பது என்பது ஆச்சரியமாகத்தானிருக்கிறது. ஏனென்றால், பொதுவாக, மான்கள் மாடுகளை அடிப்பதில்லை.

ராதா நரசிம்மபுரத்தில் நியாயவிலைக் கடை.

*511 வினு—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

மன்னார்குடி தாலுக்கா 129/1 ராதா நரசிம்மபுரம் கிராமத்தில் அரிசி மற்றும் இதர அத்தியாவசியப் பண்டங்கள் வழங்க நியாய விலைக்கடை ஒன்று திறக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : நியாயவிலைக் கடைகளைத் திறக்கும் திட்டத்தை முதற்கட்டமாக நெல்லை, மதுரை, முகவை, குமரி மாவட்டங்களில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களுக்குப் படிப் படியாக விரிவாக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவரவர்களே, 16,000 கடைகள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டபொழுது, நெல்லை, குமரி என்று அறிவிக்கப்படவில்லை. அனைத்து இடங்களிலும் என்று எதிர்பார்த்தோம். அவசரமாக, தஞ்சை மாவட்டத்திலே துவக்குவதற்கும், அனைத்துக் கிராமங்களிலும் துவக்குவதற்கும் அரசாங்கம் வேகமாக, துரிதமாக, அவசரமாக நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்கள்கூட